## 4.35 மைய அரசின் குடும்ப கணக்கெடுப்புத் திட்டம்–வழிகாட்டி நெறிமுறைகள் – வெளியிடப்படுகிறது

ஊரக வளர்ச்சி (எஸ்.ஜி.எஸ்.ஒய்) துறை

அரசாணை (நிலை) எண்: 150 நாள்: 24.12.2002

படிக்க:

1) அரசாணை(நிலை) எண்.78, ஊரக வளர்ச்சி நாள். 21.4.1999
2) மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகக் கடிதம் எண்.க்யூ–16025/4/2002/அ1 (ஊ.வ) நாள்.13.09.2002
3) ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் எண்.23094/2002/எஸ்.ஜி.எஸ்.ஒய்.2.1, நாள்.17.10.2002
4) அரசுக் கடிதம் எண்.36060/எஸ்.ஜி.எஸ்.ஒய்/2002–6, ஊரக வளர்ச்சி , நாள்.23.12.2002

**ஆணை**

தமிழ்நாட்டில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக பயனாளிகளின் குடும்பங்களை கண்டறிவதற்காக மத்திய அரசு 13 அளவுகோல்களை(Parameters) நிர்ணயித்து வழிகாட்டி நெறிமுறைகளை பார்வை 2–ல் கண்ட கடிதத்தில் வெளியிட்டுள்ளது. மத்திய அரசு தெரிவித்துள்ளபடி, இம்மாநிலத்தில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஊரக வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக பயனாளிகளின் குடும்பங்களை கண்டறியும் கணக்கெடுப்பை செயல்படுத்த கீழ்கண்டவாறு முடிவெடுத்து ஆணை வெளியிடப்படுகிறது

(I) வறுமை ஒழிப்பு திட்டங்களுக்காக வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களை கண்டறியும் கணக்கெடுப்பு பணியினை மேற்கொள்ள ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் கணக்கெடுப்பாளர்களாக (Enumerators) நியமிக்கப்பட வேண்டும்.

(ii) மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான ஒரு குழுவினை அமைத்து, அக்குழுவிற்கு கணக்கெடுக்கும் பணியின் முழு பொறுப்பினையும் ஒப்படைக்க வேண்டும். மேற்படி குழுவில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (மதிய உணவு திட்டம்), மாவட்ட சமூக நல அலுவலர் / திட்ட அலுவலர் ( ICDS / TINP) போன்ற அரசு அலுவலர்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளை சார்ந்தவர்களையும் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளலாம். ஊராட்சி ஒன்றிய அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) தலைமையில் ஒரு குழுவினை அமைத்து அக்குழுவிற்கு ஒன்றிய அளவில் கணக்கெடுக்கும் பொறுப்பினை ஒப்படைக்க வேண்டும்.

(iii) மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கணக்கெடுப்பிற்கு தேவையான படிவங்களை உள்ளூரிலேயே அச்சடிப்பதற்கும், கணக்கெடுப்பு விவரங்களை தொகுப்பதற்கும் உள்ளூரிலேயே கணிணி நிறுவனங்களை தேர்ந்தெடுப்பதற்கும் அதிகாரம் வழங்கப்படுகிறது.

(iv) ஊரக வளர்ச்சி இயக்குநர் கணக்கெடுப்பின் முக்கியத்துவத்தை கருதி, மாவட்ட ஆட்சியர்களுக்கு கீழ்காணும் வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிட வேண்டும்.

(அ) வட்டார திட்டமிடுதலுக்காக வீடுகளின் எண்.,முகவரி போன்ற புள்ளி விபரங்களை தொகுத்தல், முதல்நிலை தற்காலிக புள்ளி விபரங்களை வெளியிடுதல், கணக்கெடுப்பாளரை தேர்வு செய்தல், பயிற்சி அளித்தல், கணக்கெடுப்பு நடத்துதல், கணக்கெடுப்பாளர்களுக்கு ஊதியம் வழங்குதல், கணக்கெடுப்பு புள்ளி விபரங்களை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சி.டி (C.D.)-யில் சேகரித்தல் போன்ற பணிகள் செய்வதற்கான வழிகாட்டி நெறிமுறைகள்;

(ஆ) கணக்கெடுப்பில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் விபரங்களுக்கான வழிகாட்டி நெறிமுறைகள்.

(இ) பொதுமக்களிடம் இருந்து பெறும் குறைபாடு மனுக்கள் மீது ஆய்வு செய்து, முடிவெடுப்பது சம்பந்தமாக வழிகாட்டி நெறிமுறைகள்.

(ஈ) வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் இறுதி பட்டியலை கிராம சபையில் வைத்து அங்கீகாரம்

## 4. SGSY

பெறுதல் :

(உ) இந்தக் கணக்கெடுப்பினை 31.03.2003ம் தேதிக்குள் முடிப்பதற்கான ஒரு காலஅட்டவணையை நிர்ணயித்து பின்பற்றுவதற்கு அறிவுரை வழங்குதல்.

2. ஒரு குடும்பம் பற்றிய விபரங்களை சேகரிப்பதற்காக வழங்கப்படும் ஊதியம் சம்பந்தமான விபரம் அடங்கிய ஆணை தனியாக வெளியிடப்படும்.

3. இந்தக் கணக்கெடுப்பு குறித்து இருவாரங்களுக்கு ஒரு முறை ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு ஒரு அறிக்கை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த அறிக்கையை ஆய்வு செய்து, அதில் ஏதேனும் திருத்தம் தேவைப்படின், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இந்தக் கணக்கெடுப்பு முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் அரசுக்கு வந்து சேருமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர்அறிக்கை அனுப்ப வேண்டும். கணக்கெடுப்பு புள்ளி விபரங்களை ஆங்கிலம் மற்றும் தமிழில் சி.டி.யில் தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்புமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சாந்தா ஷீலா நாயர்**
அரசு செயலாளர்